[1968 மார்ச் 1

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1961-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாங்க ஆணையின் கீழ் இந்த முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது கோளாறு இருந்தால் அதை எழுதி அனுப்பினால் அந்தச் சங்கடங்களை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறித் துணித் தேக்கமும், நெசவாளர் நெருக்கடி நிலையும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி கீழ்க்கண்ட அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு வேண்டி ஒரு முன்னறிவிக்கையை கொடுத்திருக்கிறேன்.—

"திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் அதிகம் தேங்கியிருப்பதாலும் பல நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பாங்கு கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் கைத்தறிகள் செயல்படாமல், நெசவாளர்கள் வேலை இல்லாமல் இருப்பது பற்றி விவாதிக்க"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருப்பது அரசாங்கத்தினுடைய அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களில் ஒன்றாகும். அந்தக் கருத்தை இப்போது பேரவையின் முன் நடைபெறுகிற பொது விவாதத்தில் எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

இந்தக் கருத்தையே சட்டப்பேரவை 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர வாய்ப்பு இருந்திருக்கும். இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரால் கொடுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக ஒத்திவைப்புத் தீர்மானத்தின் உயிர் நாடியையே இந்தப் போக்கு மாற்றிவிடுவதாகத் தெரிகிறது. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அறிந்து அதைக் கொடுக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மேட்டுப்பாளையம்—உதகை இருப்புப் பாதை அகற்றப்படுவதைத் தடுத்தல்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் நீலமலைத் தொடரில் இயற்கை எழிலுடன் விளங்கும் உதகை செல்லும் மேட்டுப்பாளையம்—உதகை புகைவண்டிப் பாதையை பொருளாதார காரணங் காட்டி எடுத்துவிட இந்தியப் பேரரசு முயற்சிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.